# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2315/66 - 2023 ජනවාරි මස 21 වැනි සෙනසුරාදා - 2023.01.21

*2315/66 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை**

வடமேல் மாகாண ஆளுநர் அவர்களது அறிவித்தல்

*வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 அம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்வினை) விதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 326 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கட்டளையாகும்.*

**அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட,**
வடமேல் மாகாண ஆளுநர்.

குருநாகல் ஆளுநரது பணிமனையிலிருந்து,
*2023, சனவரி 21.*

**கட்டளை**

வடமேல் மாகாணத்திற்குரிய குருநாகல் மாநகர சபையின் மாநகர முதல்வரினால் 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி மன்ற (விசேட விதி) சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் திருத்திய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 215 (அ) பிரிவின் படி சபையில் ஏற்றுக் கொள்ளாமை மற்றும்/ அல்லது வடமேல் மாகாண ஆளுநரான என்னால் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2199/15 ஆம் இலக்கத்திற்கான மற்றும் 2020.10.29 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2020 மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதிகாரப்படுத்தும் உத்தரவுப்படி வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதிகாரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் குருநாகல் மாநகர சபையின் மாநகர முதல்வரான துசார சஞ்ஜீவ விதாரண என்பவர் தனது பதவியை இராஜினாமா செய்ததாக கருதப்பட வேண்டியதுடன், அத்திகதி தொடக்கம் அதிகாரப்படும் வகையில் குருநாகல் மாநகர சபையின் மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாகியதாக கருதப்பட வேண்டும் என்று இதன் மூலம் கட்டளை இடுகின்றேன்.

EOG *01-0214/ 1*


1A - PG 6180 — 07 (2023/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை**

வடமேல் மாகாண ஆளுநர் அவர்களது அறிவித்தல்

*வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அட்மிரால் ஒஃப் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்வினை) விதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 326 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கட்டளையாகும்.*

**அட்மிரால் ஒஃப் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட,**
வடமேல் மாகாண ஆளுநர்.

குருநாகல் ஆளுநரது பணிமனையிலிருந்து,
*2023, சனவரி 21.*

**கட்டளை**

*வடமேல் மாகாணத்திற்குரிய குருநாகல் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி மன்ற (விசேட விதி) சட்டத்தின் 7 ஆம் பிரவினால் திருத்திய 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 215 (அ) ஆம் பிரிவின் படி சபையில் ஏற்றுக் கொள்ளப்படாத மற்றும்/ அல்லது வடமேல் மாகாண ஆளுநரான என்னால் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2199/ 15 ஆம் இலக்கத்திற்கான மற்றும் 2020.10.29 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2020 மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதிகாரப்படுத்தும் உத்தரவுப்படி வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதிகாரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் குருநாகல் மாநகர சபையின் மாநகர முதல்வரது பதவி 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் வெற்றிடமாகி உள்ளதனால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்த) சட்டப்படி அப் பதவியினை நிரப்பும் வரையில் மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாகிய திகதி தொடக்கம் அப்பதவியின் அதிகாரம், நடவடிக்கை, பணியை நிறைவேற்றுதல், செய்வதும் நிகழ்த்துவதும் 252 ஆம் அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 14 (6) ஆம் பிரிவுப்படி பிரதி மாநகர முதல்வருக்கு பொறுப்பளிப்பதாக இதன் மூலம் கட்டளை இடுகின்றேன்.*

EOG *01-0214/ 2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.